**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF THIRU. MADHU SRINIVASAN ROUGH STONE QUARRY, S.F. NOS.1151, 1155, 1212, 1213, 1214, 1215, 1216, 1217, 1218, 1219, 1222, 1225 & 1226/A (PART-5) OF LEASE OVER AN EXTENT OF 1.27.0 HA, KAMANDODDI VILLAGE, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 11.09.2025 AT 10.00 AM M/s.GMV MAHAL, KURUBARATHAPALLI VILLAGE, SAPPADI POST, SHOOLAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thirumathi. T.Padmalatha | : | Deputy Collector, (District Backward Classes and Minorities Welfare Officer, Krishnagiri District) Representative of the District Collector, Krishnagiri District. |
| 2 | Er. C.Muthuraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. A.JothiPrakash | : | Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. NagarajReddy | : | The Proponent, Thiru. Madhu Srinivasan Rough Stone Quarry |
| 5 | Thiru.Uma maheshwaran | : | EIA Consultant, M/s. Geo Technical mining solutions, Dharmapuri |
| | Public | : | 51 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Deputy Collector, (District Backward Classes and Minorities Welfare Office, Krishnagiri District), Representative of the

District Collector, Krishnagiri District, Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing and explained that the proposed Thiru. Madhu Srinivasan Rough Stone Quarry, S.F. Nos.1151, 1155, 1212, 1213, 1214, 1215, 1216, 1217, 1218, 1219, 1222, 1225 & 1226/A (Part-5) of lease over an extent of 1.27.0 Ha, Kamandoddi Village, Shoolagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice about conducting Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinadhanthi" and "The New Indian Express" dated 05.08.2025 and pamphlets regarding public hearing were issued to the public of Sappadi Village, ThirumalaiKottai Village and Kamandhoddi Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Deputy Collector, District Backward Classes and Minorities Welfare Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further the project proponent was requested to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.Uma Maheshwaran, EIA Consultant, M/s. Geo Technical mining solutions, Dharmapuri of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Nagesh, Thirumalaiyudankotta Village:**

Thiru. Nagesh has said that the quarry management is helping the local temple and school students, and he has no objection for the proposed quarry and supports the project. He also requested to give employment to the local village People.

**2. Thiru. Ravichandran, Sappadi Village:**

Thiru. Ravichandran has requested the quarry management to control the speed of their quarry trucks while passing in the roads. Further he requested the quarry management to help the local temple and repairing of school infrastructure. He also requested the quarry management to follow proper safety guidelines, while carrying out blasting.

**3. Thiru. Rajappa, Pillaikothur Village:**

Thiru. Rajappa has said that he is living near a village close to the quarry and there is no issue with the establishing the proposed quarry project. Further, he requested the quarry management to help for the development of the village.

**4. Thiru. Rajesdiran, Krishnankothur Village:**

Thiru. Rajediran has said that there were no issue with the proposed quarry, Further He requested the quarry to cover the load vehicle completely with tarpaulin

while transporting the materials from the quarry and also to control the dust emission while transporting.

5. **Thiru. Murugan, Krishnankothur Village:**

Thiru. Murugan has said that there are no issue with the proposed quarry, and requested the quarry management to operate the quarry without affecting the public by following all the norms laid down by the Government.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, and opinions of the public are recorded through videography as well as in written form and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, no written representation petition was received on the proposed Thiru. Madhu Srinivasan Rough Stone Quarry project during the public hearing meeting and by O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project however, one petition from the Hon'ble CM Cell portal was received by the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur. The petition is enclosed herewith.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| District Environmental Engineer<br>Tamilnadu Pollution Control Board<br>Hosur | Deputy Collector<br>(District Backward Classes and Minorities Welfare Officer)<br>Krishnagiri | District Collector<br>Krishnagiri |
|---|---|---|

**திரு. மது சீனிவாசன் ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண். 1151, 1155, 1212, 1213, 1214, 1215, 1216, 1217, 1218, 1219, 1222, 1225&1226/A (பகுதி 5) காமன்தொட்டி கிராமம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 1.27.0 ஹெக்டேர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 11.09.2025 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம், குருபரத்தப்பள்ளி கிராமம், சப்படி அஞ்சலில் அமைந்துள்ள தி/ள். GMV மஹால்–இல் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.தா.பத்மலதா | : | துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம். (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்.) |
| 2 | Er.செ.முத்துராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.அ.ஜோதி பிரகாஷ் | : | உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. நாகராஜ் ரெட்டி | : | உரிமையாளர் திரு. மது சீனிவாசன் ரப் ஸ்டோன் குவாரி. |
| 5 | திரு. G. உமா மகேஷ்வரன் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி |
| | பொதுமக்கள் | : | 51 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திரு. மது சீனிவாசன் ரப் ஸ்டோன் குவாரி சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த துணை ஆட்சியர் (மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்),

கிருஷ்ணகிரி அவர்கள், பொதுமக்கள் மற்றும் திரு. மது சீனிவாசன் ரப் ஸ்டோன் குவாரி உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான தினத்தந்தி மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் 05.08.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், காமன்தொட்டி கிராமம், சப்படி கிராமம், திருமலைக்கோட்டை கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

துணை ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர், திரு. மது சீனிவாசன் ரப் ஸ்டோன்

குவாரி உரிமையாளரை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திரு. மது சீனிவாசன் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. G. உமா மகேஷ்வரன், தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

1. **திரு. நாகேஷ் திருமலைக்கோட்டை கிராமம்:**

திரு. நாகேஷ் திருமலைக்கோட்டை அவர்கள், இக்குவாரி வருவதால் எவ்வித பாதிப்பும் இல்லையென்றும், இக்குவாரி உரிமையாளர் உள்ளூர் கோவில் மற்றும் பள்ளிகள் சீரமைப்பு பணிகளுக்கு உதவியதாகவும் தொடர்ந்து உதவிகள் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

2. **திரு. ரவிசந்திரன் சப்படி கிராமம்:**

திரு. ரவிசந்திரன் அவர்கள், பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத வண்ணம் குவாரியை இயக்குமாறு கேட்டுக்கொண்டார். கனரக வாகனங்கள் பள்ளி வழியாக செல்லும் போது நிதானமாக இயக்க வலியுறுத்தினார். பள்ளி சீரமைப்பிற்கும், கோவில் நன்கொடைக்கும் உதவுமாறும் கோரிக்கை வைத்தார். மேலும் பாறை வெடிப்பு போன்ற செயல்களை பாதுகாப்பாக நிகழ்த்துமாறு கேட்டுக்கொண்டார்.

3. **திரு. ராஜப்பா பிள்ளைகொத்தூர் கிராமம்:**

திரு. ராஜப்பா அவர்கள், தான் குவாரிக்கு அருகில் உள்ள கிராமத்தில் தான் குடியிருப்பதாகவும் குவாரியினால் பாதிப்பு எதும் ஏற்படுவதில்லை என்று தெரிவித்தார். மேலும் கிராம வளர்ச்சிக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

4. **திரு. ராஜேந்திரன் கிருஷ்ணன்கொத்தூர் கிராமம்:**

திரு. ராஜேந்திரன் அவர்கள், இக்குவாரி வருவதினால் எவ்வித பாதிப்பும் இல்லையென்றும், மேலும் கனரக வாகனங்களால் ஏற்படும் மண் தூசுமாசு பரவலை தடுக்க தார்பாய்களை பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

5. **திரு. முருகன் கிருஷ்ணன்கொத்தூர் கிராமம்:**

திரு. முருகன் அவர்கள் இக்குவாரி வருவதினால் எவ்வித பாதிப்பும் இல்லையென்றும், இனி வரும் காலங்களிலும் பாதிப்பு ஏற்படா வண்ணம் குவாரியை இயக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க

மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், மது சீனிவாசன் ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக எழுத்து மற்றும் மின்னஞ்சல் மூலமாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை. இருப்பினும், மாண்புமிகு முதல்வரின் முகவரி இணையதளம் மூலமாக (22.08.2025) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு 1 எண்ணிகையில் மனு பெறப்பட்டது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

18/09/25 | 18/9/25 | 22/9/25
--- | --- | ---

| | | |
|---|---|---|
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்<br>ஓசூர் | துணை ஆட்சியர்<br>(மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்)<br>கிருஷ்ணகிரி | மாவட்ட ஆட்சியர்<br>கிருஷ்ணகிரி |

3/7 3/7